(2) 1973 ஆம் ஆண்டு பொது இஸ்லாமியர் அறக் கட்டளைகள் (காலவரையறையை நீட்டித்தல்) தமிழ் நாடு திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/73).

THE HON. THIRU K. RAJARAM : Mr. Chairman, Sir, I beg to move—

"That the Public Wakfs (Extension of Limitation) Tamil Nadu Amendment Bill,@ 1973 (L.A. Bill No. 8 of 1973), as passed by the Assembly, be taken into consideration".

The Public Wakfs (Extension of Limitation) Act, 1959 (Central Act 29 of 1959), as subsequently amended, extends the period of limitation in certain cases for suits to recover possession of immovable property forming part of public wakfs up to the 31st December 1972. Though, availing this provision, a number of suits have already been filed, there are a number of cases in which suits have yet to be filed. It is, therefore, considered necessary that the time-limit for filing such suits in this State should be extended up to the 31st December 1975. The present Bill seeks to achieve the above object.

Sir, I commend the motion for the acceptance of the House.

MR. CHAIRMAN : Does anybody wish to speak?

(No Member rose.)

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : சட்ட மன்றத்தின் முன் உள்ள கேள்வி—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1973 ஆம் ஆண்டு, பொது இஸ்லாமியர் அறக்கட்டளைகள் (காலவரையறையை நீட்டித்தல்) தமிழ்நாடு திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 8/73) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

சட்ட முன் வடிவு, பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

@62-ஆம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

பிரிவு 2, மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 1, நெடுந்தலைப்பு, முகப்புரை ஆகியவை மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1973 ஆம் ஆண்டு, பொது இஸ்லாமியர் அறக்கட்டளைகள் (காலவரையறையை நீட்டித்தல்) தமிழ்நாடு திருத்தச் சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 8/1973) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : மன்றத்தின் முன் உள்ள கேள்வி:—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1973 ஆம் ஆண்டு, பொது இஸ்லாமியர் அறக்கட்டளைகள் (காலவரையறையை நீட்டித்தல்) தமிழ்நாடு திருத்தச் சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 8/1973) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

(3) தமிழ் நாடு 1973 ஆம் ஆண்டு, கட்டிடங்கள் (குத்தகை வாடகைக் கட்டுப்பாடு) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/1972).

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு, கட்டிடங்கள் (குத்தகை வாடகைக் கட்டுப்பாடு) இரண்டாம் திருத்தச் சட்ட முன் வடிவு @ (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 39/1972) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

தலைவரவர்களே, இந்தச் சட்ட முன் வடிவு பேரவை, மேலவையின் ஒப்புதலோடு கூட்டாய்வுக் குழுவின் ஆய்வுக்கு அனுப்பப்பட்டது. கூட்டாய்வுக் குழுவில் பேரவை, மேலவை உறுப்பினர்கள் கலந்து கொண்டு தங்களுடைய மேலான விளக்கங்களைத் தந்தார்கள். இந்த